# மாரித் தவக்கைகளுக்காய்...

எங்கட சனங்களுக்கு பொது இடங்களில் எப்படி கதைக்கிறதெண்டு கொஞ்சம் கூட தெரியாது கண்டியளோ.

அண்டைக்கொரு நாள்... வேலை முடிஞ்ச களைப்பில பஸ் ஏறி (காரே... இல்லாத... உமக்கு இது தேவையா... எண்டு இப்பவே comment அடிச்சிராதையுங்கோ...) நான் உண்டு...என்பாடு எண்டு பயணித்துக் கொண்டிருந்தேன்.

ஒரு பஸ் stop இல் நம்மவர் ஒருவர் செல்போனுடன் ஏறி பஸ்சிற்குள்ளே உரத்த குரலில் வெளுத்துக் கட்டிக் கொண்டிருந்தார்.

“ஓமடா... அப்படியா” “மச்சான்... நானெண்டா”அப்படி இப்படி எண்டு அதிரடியான குரலில் அலவாங்கை விழுங்கினது போல் கதைத்து... இல்லை கத்திக் கொண்டிருந்தார்.

மொழி தெரிந்த எனக்கே இவரின் கத்தலை சகிக்க முடியவில்லை. எண்டா... மற்ற வர்களை சற்று யோசிச்சுப் பாருங்களேன்.

அனேகமாக மற்றவர்கள் எல்லோரும் இவர் யாருடனோ சண்டை பிடிப்பதாகத்தான் நினைத்திருப்பார்கள்... அருகில் இருந்தவர் களைப் பற்றியோ... தன்னை ஒரு allens ஆக பார்க்கும் கண்களைப் பற்றியோ... எதுவித அக்கறையும் இன்றி விளாசித் தள்ளிக் கொண்டிருந்தார்... ஆளவிடுங்க... ஐயா சாமி... எண்டு எண்ர stop இல இறங்கிவிட்டேன்.

இது போன்று பல இடங்களில் கத்திக் கதைப்பவர்கள் கைவரிசையை (வாய்வரிசையை) நாம் அதிகம் கண்டிருப்போம்.

எங்கட தமிழ் program களில (அதுதானையா பொன்னாடை போக்கிற திரை இசை நடனமாடுற) பின்னுக்குத் திரும்பி பாத்திங்களெண்டா... எமது சமுதாயத்தில் தம்மை ‘புத்திஜீவிகள்’ எண்டு அடையாளப்படுத்திக் கொண்ட... கொண்டிருக்கும்... பல பிரபலங்கள் (?) பின்னுக்கு நிண்டு கத்திக் கதைத்து கொண்டிருப்பினம். அவேன்ர கத்தலில மேடையை பின்னுக்கு மாத்தலாமா எண்டு கூட யோசிக்க வைக்கும்.

மேடையில் ஏழெட்டு சின்னஞ் சிறுசுகள் தம்மால் இயன்றவரை தமிழ் கலாச்சாரத்தை (மேடையில) கட்டியெழுப்ப பாடுபட்டுக் கொண்டிருக்கும். ஆனா இந்த பிரபலங்கள் / புத்திஜீவிகள் எண்டு சொல்லுறதுகள் இது பற்றி ஒண்டும் கண்டு கொள்ளாமல் தங்களுக்குள்ளே கத்திக் கொண்டு நிக்குங்கள்... இதுகளெல்லாம் எமது சமுதாயத்தின் முதுகெலும்பு எண்டு சொல்லக்கேள்வி...

Strictly for புலம் பெயர்ந்தவர்களுக்கு

புறுபுறுப்பவர்: மறுத்தான் மோனா

சரி இதை விடுங்க... ஒரு serious ஆன நாடகவிழா நடந்து கொண்டிருக்கும். ஒருவருடைய செல்போன் அமைதியை கிழித்தபடி... ring பண்ணும்... எல்லோர் கண்களும்... செல்போனில் குவிந்திருக்கும்... ஆனா அதை வைத்திருப்பவர்... அங்கு நடக்கும் மாற்றம் பற்றி எதுவித அக்கறையும் இன்றி... ‘கலோ... என்னப்பா. program இல நிக்கிறன்... பால்...ok வாங்கிக் கொண்டு வாரன்... வேற... முட்டை... பாண்... எண்டு தொடர்ந்து கொண்டே போவார்...

எவ்வளவோ சிரமப்பட்டு அந்த நிகழ்வை தயாரித்து...ரசிகர்களை ஒருமுகப்படுத்தி தமது படைப்பை வெளிக் கொண்டிருந்த அந்த நாடக குழுவினருக்கு கிடைத்த அடிதான்... என்று சொல்வேன் அடி... இவனுகளை எல்லாம்... யாரப்பா... இங்கே... வரச்சொன்னது?

எது என்னவோ... நாமெல்லாம் செல்லடிக் குள் இருந்து வந்தமோ... என்னமோ... சொற்கள் எல்லாம் செல்லடிகளாகத்தான் எமக்குள் இருந்து வெளிவருகின்றன. இத கட்டுப் படுத்தோணும் கண்டியளோ... இல்லாட்டா... நாடு தாங்காதையா...

பொது இடங்களில் கத்திக் கதைக்கும் பழக்கம் எவருக்கும் ஒரு ஆரோக்கியமான விடயமாக இருக்க மாட்டாது.

தொலைபேசியில் உரையாடும் போதோ... அல்லது இன்னொருவருடன் உரையாடும் போதோ... நாம் எமது குரலின் அளவை கட்டுப்படுத்தப் பழக வேண்டும். மற்ற வர்களுக்கு இடையூறு விளைவிக்கும் எதனையும் தவிர்த்து கொள்வதை நாம் ஒரு வழக்கமாகக் கொள்ளல் வேண்டும்.

எல்லோருக்கும் ஒவ்வொரு பலவீனங்கள் இருக்கும். ஆனால் இந்த பலவீனங்களுக்கு நாம் ஒருபோதும் அடிபணியக் கூடாது. இவை எப்போதும் எமது கட்டுப்பாட்டில இருக்க வேண்டும்.

ஒரு சமுதாயத்தில் எம்மை அடையாளப் படுத்த வேண்டுமெண்டால் நல்ல பழக்க வழக்கங்களைப் பழகிக் கொள்ளல் வேண் டும். அது மட்டுமல்லாமல் மற்றவர்களின் உணர்வுகளையும் மதிக்கத் தெரிய வேண்டும். இவையெல்லாம் உங்களால் செய்ய முடிஞ்சா... உங்களுக்கான இடம் உங்களுக்காகவே... காத்திருக்கும்.

ஒரு நிகழ்வுக்குப் போகும் முன்னர் தொலைபேசியின் volume ஐ குறைத்து விட்டு செல்வது அவசியம். அவசரமான call ஆக இருந்தால்... மண்டபத்தை விட்டு வெளியே சென்று பேசுவதன் மூலம் மற்ற வர்களுக்கு ஏற்படுத்தும் இடையூறை தவிர்க்கலாம். இப்படி பல விடயங்களில் எம்மை நாமே தயார்படுத்தப் பழகினால் இந்த கத்திக் கதைக்கும் பழக்கத்தைக் கட்டுப்படுத்திவிட முடியும்.

அளவுக்கதிமான சத்தம் polution என்று கூறுவார்கள். எனவே இதற்கு நீங்கள் காரணமாக இருக்காதீர்கள்.

இது விளங்கினா... கத்திக் கதைப்பதை நிப்பாட்டுங்கோ... இல்லாட்டியும்... தொடர்ந்து கத்துங்கோ... கிணற்றுத் தவளை போல... எண்டு நான் சொல்ல மாட்டன்.

# கிளி அண்ணா ...

( 20ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சம்பவத்தில் தொண்டையில் எற்பட்ட காயத்தாலேயே அதன்பின்னர் ஒரு கரகரப்பு அவரது குரலில் ஒட்டிக்கொள்கிறது. பின்னர் 2003இல் விபத்தொன்றில் சிக்கு கிறார். கடுமையான விபத்து. அப்போதும் மரணம் அவரை முகர்ந்து பார்த்து விட்டு சென்றிருக்கிறது.

அவர் அண்மையில் கனடா வந்திருந்த போது அவரைச் சந்தித்தேன். அதே எளிமையான துறவியே எனக்குத் தெரிந்தார். அப்போது அவருடைய சிந்தனை முழுவதும் தேசம் பற்றிய எண்ணம் வியாபித்திருந்ததை என்னால் உணரமுடிந்தது. அவருடைய பணிகள் விஸ்வரூபம் எடுத்திருப்பதையும் உணரமுடிந்தது. கிளியண்ணாவின் சேவை அதிகளவில் மக்களுக்குத் தேவைப்படுவதை மட்டும் புரிந்து கொண்டேன்.

பின்னர் தொலைக்காட்சியில் செய்திகளில் அவரைப் பார்க்கிற போதெல்லாம் அவரு டைய பணியின் பரிமாணங்கள் புரியத் தொடங்கின.

ஒருநாள் தொலைக்காட்சியில் வெண் தாடியுடன் தோன்றினார். ஓவியர் மாற்குவின் மேதமை என்கிற ஓவியம் பிரபலமானது. தீர்க்கமான கண்களுடனும் வெண்தாடியுடனும் ஒருவர் உட்கார்ந்திருக்கும் அந்த ஓவியம் பல படிமங்களைக் கொண்டது. எனக்கு அந்த ஓவியமே நினைவில் வந்தது. அதன்பிறகு அவருடன் நான் பேசவில்லை.

அவருடைய பிரமாண்டங்களுக்கு அப்பால் நுனிநாக்கைக் கடித்தபடி வெளிவரும் அவருடைய புன்னகை மாத்திரம் எங்களும் நிறைந்து கிடக்கிறது.


**Ratna & Company** Solicitors



We are accredited both by Law Society and the Legal Services Commission, as providers of quality service, in all areas of Immigration law.

We are authorised by the Legal Services Commission to provide free legal advice (If you are entitled for the same).

Contact:

**Mr. M. or Mrs. K. Ratnapalan**

T: **020 8470 8818** F: **020 8475 0131**

M: **07769 748 409**

Visit: www. ratna.co.uk Email: mratnapalan@hotmail.com

169A High Street North, East Ham, London. E6 1JB

- தேசியம் குடியுரிமை அகதி நிலை ஐரோப்பிய ஒன்றிய சட்டங்கள் தொடர்பான பிரச்சினைகள்
- ஐக்கிய ராச்சியத்தில் 7/10/14 வருடங்கள் வசித்தவராயிருப்பின் நிரந்தர வதிவிட விண்ணப்பங்கள்
- தொழில் அனுமதி, மனித உரிமை, தடுத்து வைத்தல் தொடர்பான விடயங்கள்
- வீடுகள் விற்பனை நிலையங்கள் வாங்குதல் விற்றல் remortgage, transfer of equity வசதிகள்
- remortgage, transfer of equity
- Power of Attorney / Last will; / Sponsorship விடயங்கள்
- குடும்ப திருமண விவகாரங்கள்
- இலவச சட்ட ஆலோசனை வழங்குவதற்காக Legal services Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
- எமக்குத் தொடர்ந்தும் Immigration & Asylum சட்டத்தில் இலவச சட்ட ஆலோசனை கொடுப்பதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்துள்ளது